பக்கங்கள்:-14

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 24 | திங்கட்கிழமை | 09.12.2024 | அதிர்வு 129

## 7 பேரைக் கைது செய்ய வடக்கு பொலிஸ் திட்டம்

வடக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் வகையில் ஏழு சட்டவிரோத மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவர்களைக் கைது செய்யப் பொலிஸார் 05





### அடுத்த வருட இறுதி வரை ஏன் காத்திருப்பு?

# மாகாண சபைத் தேர்தலை மிக விரைவாக நடத்துங்கள்

## அநுர அரசிடம் சுமந்திரன் வலியுறுத்து

கொழும்பு, டிசம்பர் 09

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, மாகாண சபைத் தேர்தலைக் கால தாமதமின்றி மிகவும் விரைவாக நடத்த வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தினார். 05



## பருத்தித்துறையில் கிணற்றுக்குள் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

யாழ். பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் கற்கோவளம் – வராத்துப்பளை பகுதியில் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் கம்பி வலையால் மூடப்பட்ட பொதுக்கிணற்றுக்குள் இருந்து மீட்கப் பட்டுள்ளது. 05

## மதுபானப் பத்திரங்களில் மோசடி இடம்பெறவில்லை

### அநுர அரசுக்கு ரணில் பதில்



“கடந்த அரசால் வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் எவையும் இரகசியமாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ வழங்கப்பட வில்லை. அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவே அந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ரணிலின் 05




மீண்டும் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும் என்று நேற்று முன்தினம் கூடிய ரெலோவின் தலைமைக் குழு தீர்மானித்தாலும், அந்த ஒன்றிப்புக்கான நடைமுறைச் சாத்தியங்கள் குறித்து அந்தக் கட்சியின் மூத்த தலைவர்கள் தனிப்பட்ட முறையிலும் தங்களுக்குள் விவாதித்திருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

கடந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலை ஒட்டித்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்தது.

“உள்ளூராட்சித் தேர்தலைத் தனித்தனிக் கட்சிகளாகப் பிரிந்து நின்று எதிர்கொண்டால் அதிக ஆசனங்களை ஈட்டலாம். அப்படிப் பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொண்டு விட்டு, பிரதேச சபைகள் தோறும் ஒன்றுபட்டு நின்று அதிகாரத்தைக் கைப்பற்றும் வழிவகைகளைப் பார்க்கலாம்” – என்று சுமந்திரன் வழங்கிய ஆலோசனைய்யைப் பிழையாக – தவறாக – அர்த்தப்படுத்திக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை 05

# புதிய அரசமைப்பில் அரசியல் தீர்வு உறுதி

## சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர செவ்வி

இலங்கைக்குப் புதிய அரசமைப்பு தேவை என்பதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாக இருக்கின்றது. அந்த அரசமைப்பில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உள்ளடக்கப்பட்டு சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்."

– இவ்வாறு வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போது, புதிய அரசமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையிலிருந்து ஆரம்பமாகுமா இல்லை முழுமையாக ஆரம்பத்திலிருந்தான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா என்றும், மூன்று ஆண்டுகள் காலம் தாழ்த்தப்படுகின்றபோது அச்செயற்பாட்டுக்கு எதிரான எதிர்ப்புக்கள் வலுவடையும் சவாலான நிலைமைகள் ஏற்பட்டால் அதனை எவ்வாறு கையாளவுள்ளீர்கள் என்றும் வினவியவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் மேலும் தெரிவிக்கையில்,

"2015-2019 அரசின் காலப் பகுதியில் ஆட்சியில் இருந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான செயற்பாடுகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள இடைக் கால அறிக்கையில் இருந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை மையப்படுத்திய புதிய அரசமைப்பைத் தயாரிப்ப தற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். அதனை நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டுள்ளோம்.

இருப்பினும், அந்த இடைக்கால அறிக்கையை விடவும் முற்போக்கான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாம் அது பற்றி கலந்துரையாடுவதற்குத் தயா ராகவே உள்ளோம்.

எவ்வாறாக இருந்தாலும் 22 திருத்தங்கள் அரசமைப் பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு புதிய அரசமைப்பு தேவை என்ற விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எமது அமைப்பின் கொள்கைகளை மையப்படுத்திய விடயத்தை முன்வைப் போம். அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதவில்லை.

எமது முன்மொழிவுகள் தீர்வை அடைவதற்கான ஒரு பயணப்பாதையாகும். சில தரப்பினர் சமஷ்டிக் கோரிக் கையை முன்வைத்து அந்த வழியால் தீர்வை அடையலாம் என்ற குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டில் அனைத்துப் பிரஜைகளும் சம அந்தஸ்துடன் சாந்தியும் சமாதானமுமாக வாழ வேண்டும். வளங்கள் சம மாக பகிரப்பட வேண்டும் என்பதுதான் இலக்காக உள்ளது. அதனை அனைவரினதும் பங்களிப்புடன் அடைந்து



கொள்வதுதான் நோக்கமாக உள்ளது.

இதேநேரம், புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்ற போது 13ஆவது திருத்தச் சட்டம் மட்டுமல்ல முதலாவது திருத்தத்திலிருந்து 22ஆவது திருத்தம் வரையில் அகற றப்பட்டு அவற்றின் உள்ளடக்கங்களைக் கொண்டதொரு புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

அதேநேரம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத் தில் மாகாண சபை முறைமை நீக்கப்படாது. நாட்டில் யுத்த மொன்று இடம்பெற்றது.

பல தசாப்தங்களாக இனங்களுக்கிடையிலான பிரச்சினை நீடித்துக்கொண்டுதான் உள்ளது. அதற்கான தீர்வு வழங்கப் படும் வரையில் மக்களிடத்திலிருந்து வெளிவருகின்ற கோஷங் கள் ஓயப்போவதில்லை.

எனவே, எமது நோக்கம், அனைவரினது இணக்கத்துடன் ஏற்படுத்தப்படுகின்ற தீர்வானது மக்களின் அங்கீகாரத்துக்காக விடப்படும். அதாவது, புதிய அரசமைப்பு உருவாக்கப்படு கின்ற நிலையில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவோம்.

அதேநேரம், தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசு இனவாதம், மதவாதத்தை பேசவில்லை. அவ்வாறு பேசுவ தற்கு இடமளிக்கவும் இல்லை. வழக்கமாக ஆளும் தரப்பு தான் அவ்விதமான மனோநிலையில் செயற்படும்.

ஆனால், இம்முறை அவ்விதமான நிலைமை காணப்பட வில்லை. ஆகவே, இந்த மாற்றமானது, புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளுக்கு சவால்களை அளிக்காது என்றே கருதுகின்றேன். நிச்சயமாக மக்கள் எதிர்பார்க்கின்ற முறைமை மாற்றமொன்று ஏற்படும்." – என்றார்.

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி – ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரபாண் டிய முனை பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியைக் கைவசம் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

ஜெயபுரம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஜெயபுரம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய வர் ஆவார்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஜெயபுரம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## பயங்கரவாதத் தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம்:

# வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கான அழுத்தங்களை அரசுக்குச் சிவில் சமூகம் தொடர்ந்து வழங்க வேண்டும்

### அமெரிக்காவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் வலியுறுத்து



இலங்கை அரசிடம் போதிய நிதி இல்லாததன் விளைவாக ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து சுட்டிக்காட்டி, நிதி உதவிகளை வழங்குமாறு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை மறுத்திருக்கும் அமெரிக்காவின் உயர்மட்டப் பிரதிநிதிகள், அதற்கான சாத்தியப்பாடுகள் பெருமளவுக்கு இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, புதிய அரசு பேணிவரும் சமநிலையான வெளியுறவுக் கொள்கை தொடர்பில் திருப்தியை வெளிப்படுத்தியிருக்கும் அப் பிரதிநிதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பன தொடர்பில் அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதற்குரிய அழுத்தங்களைச் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தொடர்ந்து வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்திருக்கும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் டொனால்ட் லூ தலைமையிலான அமெரிக்க உயர்மட்ட பிரதிநிதிகளுக்கும், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது நாட்டின் சமகால மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நிலைவரம் குறித்தும், புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் நகர்வுகள் குறித்தும் பரந்துபட்ட அடிப்படையில் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி தற்போது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் குறித்தும், அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான உத்தேச சட்டமூலம் குறித்தும் அமெரிக்க உயர்மட்ட பிரதிநிதிகளிடம் தமது தீவிர கரிசனையை வெளிப்படுத்திய சிவில் சமூக பிரதிநிதிகள், அவற்றின் தாக்கங்கள் தொடர்பிலும் விரிவாக விளக்கமளித்தனர்.

அதனைச் செவிமடுத்த அமெரிக்கப் பிரதிநிதிகள், இச்சட்டங்களை முற்றாக நீக்குவது குறித்து அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்குரிய அழுத்தங்களை சிவில் சமூக பிரதிநிதிகள் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அதுமாத்திரமன்றி ஜனநாயக ஆட்சி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இவ்விடயங்கள் தொடர்பில் சகலரையும் உள்ளடக்கிய பரந்துபட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை புதிய அரசின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் திருப்திகரமான சமிக்ஞையை வெளிப்படுத்திய அமெரிக்கப் பிரதிநிதிகள், அரசு ஏனைய நாடுகளுடன் சமநிலைத்தன்மை வாய்ந்த வெளிவிவகாரக் கொள்கையைப் பேணி வருவதாகத் தெரிவித்தனர்.

அதேபோன்று பொருளாதாரக் கொள்கை என்று வருமிடத்து, சர்வதேச நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதி வசதி செயற்றிட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக அரசு செயலாற்றி வருவது குறித்து வரவேற்பு வெளியிட்ட அமெரிக்கப் பிரதிநிதிகள், சமகால பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கை அரசிடம் போதுமான நிதி இல்லை எனவும், அது மிக முக்கிய பிரச்சினையாக இருப்பதாகவும் அமெரிக்க உயர்மட்டக் குழுவினரிடம் சுட்டிக்காட்டிய சிவில் சமூக பிரதிநிதிகள், எனவே, இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கமுடியாதா? எனக் கேள்வி எழுப்பினர்.

இருப்பினும் அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என அவர்கள் பதிலளித்தனர். அதனையடுத்து எம்.சி.சி. ஒப்பந்தத்தில் இலங்கையை உள்வாங்குவதற்கான வாய்ப்பு உண்டா? எனச் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் எழுப்பப்பட்ட கேள்விக்கு, அந்த ஒப்பந்த காலம் முடிவடைந்துவிட்டமையினால் அதுவும் சாத்தியமில்லை என அமெரிக்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இருப்பினும் ஊழலை முடிவுக்குக் கொண்டுவருவதை இலக்காகக் கொண்டு அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும், மக்களின் குரலைப் பிரதிபலிக்கக்கூடியவாறு சகலரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் எனவும் அவர்கள் சிவில் சமூக பிரதிநிதிகளிடம் உறுதியளித்தனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் புத்தளத்தில் ஒருவர் கைது!

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலவியா பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் புத்தளம் முகாமின் அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 42 வயதான பலவியா பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இவர் மேலதிக விசாரணைகளுக்காகப் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச விசாரணையே தேவை

## அநுர அரசுக்கு உறவினர்கள் அழுத்தம்



“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் உள்ளகப் பொறிமுறையை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். சர்வதேச விசாரணையொன்றே இந்த விடயத்தில் எமது தீர்க்கமான முடிவு.”

– இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உறவுகளின் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

“நாங்கள் இப்போதும் எமது உறவுகளை தொடர்ச்சியாகத் தேடி வருகின்றோம். எமக்குரிய பதில்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோருக்காக அமைக்கப்படும் அல்லது பரிந்துரைக்கப்படும் உள்ளகப் பொறிமுறைகளில் எமக்கு நம்பிக்கையில்லை.

நாம் சர்வதேச விசாரணைகளையே திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம். அதுதான் எமது முதலும் முடிவுமான கோரிக்கையாக உள்ளது. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவையோ அல்லது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையோ வழங்கி போராட்டத்தை முடித்து விட இலங்கை அரசு முயன்று வருகின்றது. பணத்தை நாம் கோரவில்லை. மரணச் சான்றிதழையும் நாம் கோரவில்லை. நீதிதான் எமக்குத் தேவை. எனவே, சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக அமைக்கப்படும் பொறிமுறைகளை நாம் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம்.” – என்றனர்.

# காட்டு யானை தாக்கி ஆண் ஒருவர் மரணம்



காட்டு யானை தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாவுல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஸ் பொபெல்ல பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் போகஸ் பொபெல்ல பிரதேசத்தை சேர்ந்த 53 வயதுடையவர் ஆவார்.

இவர் அந்தப் பகுதியில் உள்ள உறவினர் வீட்டிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று நாவுல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழ். வடமராட்சியில் இளம் தாய் திடீர் சாவு!

யாழ்ப்பாணம், வடமராட்சி, அல்வாயில் இளம் தாய் ஒருவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார்.

அல்வாய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் நிரோஷா (வயது-32) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் வீட்டிலிருந்த போது அவர் திடீர் சுகவீனமுற்றதைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதையடுத்தே சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடைத்தன பங்காளி கட்சிகள்.

அப்படிப் பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொள்வதன் மூலம் பங்காளி கட்சிகளின் செல்வாக்கு வறுமையை - பின்னடைவு நிலைமையை - மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திக் காட்டவே சுமந்திரன் அப்படிக் கூறுகின்றார் என்று பங்காளி கட்சிகள் அப்போது தங்களுக்குள் கறுவிக் கொண்டன என்பதும் உண்மைதான்.

அந்த விடயத்தை பிழையாக அர்த்தப்படுத்தி புரிந்து கொண்டு, பிரிந்து நின்றமையின் விளைவை - தமிழ்க் கூட்டமைப்பை உடைத்தமையின் பயனை - தமிழ்த் தேசியத் தரப்புகள் இப்போது அனுபவிக்கின்றன. முதலுக்கே மோசம் என்ற நிலைமை. அதனால் இப்போது மீண்டும் தமிழ்த் தேசியத் தரப்புக்களின் அரசியல் மீள் கட்டுமானம் குறித்து சிந்திக்கும் கட்டாயம் - நெருக்கடி - ஏற்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனு கோரலோடு சிதறிய தமிழ் தேசிய கூட்டமைப்பு, அந்தத் தேர்தல் நடக்காமல் தள்ளிப்போய் மீண்டும் அதே தேர்தலுக்கான வேட்பு மனு கோரப்படும் சூழலில் மீளவும் ஒன்றிக்கும் சூழல் வந்திருக்கின்றது.

இந்த ஒன்றிப்புப் பற்றி பேசிய ரெலோவின் மூத்த தலைவர்கள், ஆயினும், ஒன்றிப்பும் ஐக்கியமும் ஏற்பட்டாலும், வரக்கூடிய உள்ளூராட்சித் தேர்தல்களை பிரிந்து நின்றுதான் எதிர்கொள்ள வேண்டும், அதுதான் வீண் குழப்பங்களைத் தவிர்க்கும் எனக் கருதுகிறார்கள் என்று தெரிகின்றது.

2023 இல் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போதும், அதனை பிரிந்துநின்றுதனித்தனிக்கட்சிகளாகஎதிர்கொள்வோம் என்று சுமந்திரன் கூறிய காரணமல்ல, இப்போது பிரிந்து நின்று அந்தத் தேர்தலை எதிர்கொள்வது என ரெலோத் தலைவர்கள் கருதுவதற்கு அடிப்படை. அதற்கு வேறு காரணங்கள் உண்டு.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் 2023 முற்பகுதியில் கோரப்பட்ட போது தமிழர் பிரதேசங்கள் எங்கும் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் தனியாகவும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி குத்துவிளக்குச் சின்னத்தில் தனியாகவும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. வட்டாரங்களிலும் பட்டியலிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டன.

இப்போது இரண்டு தரப்புக்களும் மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் ஒன்றாகச் சேர்ந்து ஒரு வேட்பாளர் பட்டியலை தயார் பண்ணினால், இரண்டு தரப்புக்களிலும் சேர்ந்து மொத்தம் ஒரு தொகுதி வேட்பாளர்கள் வெளியே விடப்படுவார்கள். புறமொதுக்கப்பட்டு நிராகரிக்கப்படுவார்கள். அப்படிச் செய்வது திடீர் ஆதரவு பெற்றிருக்கும் ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்திக்கு நல்ல வேட்பாளர்களைத் தாங்களே தேடி வழங்குவதாகிவிடும் என்ற யதார்த்தத்தை ரெலோ தலைவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

அதனால் தமிழ்த் தேசிய கட்சிகளின் அரசியல் மீள் கட்டுமானம் உடனடியாக சாத்தியமானால் கூட, சில மாதங்களில் வரக்கூடிய உள்ளூராட்சித் தேர்தலைப் பிரிந்து நின்று கேட்பதே தமிழ் தேசியத்துக்கு உகந்தது என்ற நிலைப்பாடு அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

எது, எப்படி என்றாலும் 2023 முற்பகுதியில் சுமந்திரன் கூறிய விடயத்தை இப்போதாவது வலிந்து பின்பற்ற வேண்டிய நிலைமை - கட்டாயம் - கூட்டமைப்பின் பிற பங்காளிக் கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயம்தான்.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“மாகாண சபைத் தேர்தலுக்கு அடுத்த வருட இறுதி வரை காத்திருக்காமல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிறைவடைந்த பின், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.” - என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னதாக மாகாண சபைகளை முழு அதிகாரத்துடன் இயங்கச் செய்வது முக்கியமானதாகும் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

## 7 பேரைக் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டமிட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்தார்.

அவர்களைக் கைது செய்வதற்கு வசதியாக அந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்த நபர்கள் குறித்த அறிக்கைகள் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அந்த ஏழு நிகழ்வுகளில் நான்கு நிகழ்வுகள் பருத்தித்துறை பிரதேசத்திலும், இரண்டு கிளிநொச்சியிலும், ஒன்று யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏற்பாட்டாளர்கள் தொடர்பான தகவல்கள், காணொளிப் பதிவுகள் மற்றும் தகவல் அறிந்தவர்கள் மூலம் பெறப்பட்ட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பிடியாணையைப் பெறுவதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களிலும் பொலிஸார் இந்த விடயத்தை அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று கூறப்படுகின்றது.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது தாயாரை நேற்றுமுன்தினம் பிற்பகலில் இருந்து காணவில்லை என அவரது குடும்பத்தினர் தேடிச் சென்ற வேளை குறித்த கம்பி வலையால் மூடிய கிணற்றடிப் பகுதியில் தொலைபேசி சத்தம் ஒலித்த நிலையில் அந்தக் கிணற்றை அவரது மகன் எட்டிப் பார்த்த வேளை சடலம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாகக் காணப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தாயான விமலன் சிந்து என்கின்ற 42 வயதுடைய தாயார் ஆவார்.

இது தொடர்பான தீவிர விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மதுபானப் பத்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆட்சிக்காலத்தில், நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான விவரங்கள் அநுர அரசால் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டன. இதையடுத்தே, சட்டவிரோதமாக இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும், ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்துக்கும் அரசு கட்டணத்தை அறவிட்டுள்ளது என்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது வேறு எவருக்கோ இலஞ்சமாக மதுபான உரிமங்கள் வழங்கப்படவில்லை. அவை சட்டரீதியாக அரசுக்கு வருமானம் ஈட்டுவதற்காக வழங்கப்பட்டவை.

ஒவ்வொன்றும் 10, 15, 20 மில்லியன் ரூபாவுக்கு விற்கப்பட்டன. நேரடி வரிகள் இல்லாமல் வருவாய் ஈட்டுவதற்கான வழிகள் இவை. இந்த அனுமதிப்பத்திரங்களால் அரசின் வருமானம் நான்கு முதல் ஐந்து பில்லியன் ரூபா வரை அதிகரிக்கும்.

இன்னும் 300 உரிமங்களை வழங்க விருந்தோம். அடுத்த ஆண்டு மேலும் 300 உரிமங்களை வழங்க ஏற்பாடு செய்திருந்தோம்.

கலால் வரி வருவாய் நாட்டின் பிரதான வருமான ஆதாரங்களில் ஒன்றாகும்.” - என்றார்.

# கட்டுநாயக்கவில் கோடாவுடன் குடும்பஸ்தர் ஒருவர் சிக்கினார்

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாது கங்கை ரம்ய தொடுபொல பிரதேசத்தில் சட்டவிரோதமாக மதுபானம் வடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கோடாவை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 61 வயதுடைய ஹீனடியன பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஆவார்.

இந்தக் கைது நடவடிக்கையின்போது மதுபானம் வடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் 3,591,000 மில்லி லீற்றர் அளவுடைய கோடாக்கள் (19 பீப்பாய்கள்) பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கட்டுநாயக்கப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குட்டித் தேர்தலில் கதிரை சின்னத்தில் களமிறங்க சுதந்திரக் கட்சி தீர்மானம்

## லசந்த அழகியவண்ண தகவல்



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி, வடக்கு, கிழக்கு உட்பட சகல தொகுதிகளிலும் கதிரை சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சுதந்திரக் கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கூடிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்கள் வினவியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுச் சபைக் கூட்டமும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டமும் இடம்பெற்றது.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 341 தொகுதிகளிலும் போட்டியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவொன்றும், மறுசீரமைப்புக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகும்.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தலைமையாகக் கொண்ட கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கூட்டணி தொடர்பில் சில தரப்புக்களுடன் பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் என்ற ரீதியில் சாமர சம்பத் தஸநாயக்க நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

கதிரை சின்னத்திலேயே இம்முறை தேர்தலில் களமிறங்குவோம். எமது கூட்டணி சார்பில் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தேசியப் பட்டியல் ஆசனமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதைப் புதிய ஜனநாயக முன்னணியிடம் வலியுறுத்தியிருக்கின்றோம். விரைவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றோம்." – என்றார்.

# பொலிஸ் ஜீப் மோதி பாதசாரி படுகாயம்!

## பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

மட்டக்களப்பு, செங்கலடியில் கரடியனாறு பகுதியில் பொலிஸ் ஜீப் வாகனம் மோதியதில் பாதசாரி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தையடுத்து பொலிஸ் ஜீப் வாகனத்தின் சாரதியான கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கரடியனாறு போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.





# சதொச ஊடாக இன்று தொடக்கம் நாளாந்தம் இரண்டு இலட்சம் தேங்காய்கள் விநியோகம்

லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை இன்று திங்கட்கிழமை முதல் இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்படும் என்று வர்த்தக, வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசுக்குச் சொந்தமான தோட்டங்களில் இருந்து பெறப்படும் தேங்காய்கள், சன நெரிசல் அதிகமாக உள்ள குறிப்பாக கொழும்பு உட்பட நகர்ப்புறங்களை இலக்கு வைத்து சதொச விற்பனை நிலையங்களில் தலா 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

தேங்காய் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நாளாந்தம் சுமார் ஒரு இலட்சம் தேங்காய்களை விற்பனை செய்யப்பட்டது.

சந்தையில் நிலவும் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும் என்று வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 8 இந்திய மீனவர்களுக்கும் மறியல்



யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றத்தில் கைதான 8 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்திய மீனவர்கள் 8 பேரைக் கைது செய்ததுடன், அவர்களது இரண்டு படகுகளையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் சாலினி ஜெயபாலச்சந்திரன் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்திய போது, 8 பேரையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மிருகத்தனமான சட்டம்

நாளை டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம்.

இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதற்குக் காரணமான கொடூரச் சட்டமான பயங்கரவாதத் தடைச் சட்டம் 46 ஆண்டுகளாக தனது காட்டுமிராண்டித் தனப் பண்பியல்புகளுடன் இந்த நாட்டில் தொடர்வதுபற்றிய பெரும்கொடுங்கோன்மை குறித்து மீண்டும் அதிகம் பேசப்படும் காலம் இது.

அந்தச் சட்டத்தை ஒழிப்பதாகத் தமது தேர்தல் விஞ்ஞாபனதின் மூலமும், மேடைக்கு மேடை பிரசார முழக்கங்களிலும் அறிவித்தும் ஆட்சியைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி, அந்த நிலைப்பாட்டில் இருந்து மெல்ல மெல்ல விலகும் போக்குத் தென்படும் சூழல் இது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, அத்தரப்பு ஒழிப்பதாக உறுதியளித்த சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் இதுவரை பத்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அறுகம் குடா சம்பவம் தொடர்பில் ஆறு பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களைத் தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கையொப்பமிட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. மாவீரர் தினத்தின் போது சமூக வலைதளங்களில் பதிவிட்டமைக்காக மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர். அதில் மூவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஒருவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தர்ப்ப வசமாக இந்த நான்கு பேரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்கள் மீது சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழேயே குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது.

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உட்பட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் செயல்பாடுகளையும் ஒழிக்க வேண்டும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களின் சிவில் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்" என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் அழைப்பு விடுத்த தேசிய மக்கள் சக்தி, இப்போது மெல்ல மெல்ல அதிலிருந்து சறுக்கத் தொடங்கியிருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஆட்சித் தரப்பு மீண்டும் பயன்படுத்துகின்றமை, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தடுப்புக் காவல் உத்தரவுகளில் தொடர்ந்து ஒப்பமிடுகின்றமை மற்றும் ஆளும் தரப்பு அரசியல்வாதிகளின் அறிக்கைகள் என்பன பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பதில் அவர்களின் அர்ப்பணிப்பில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

புதிய நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்பதை உறுதிப்படுத்திய போதிலும், அதற்கு பதிலாக மற்றொரு பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டு வரப்படும் என்ற 'பழைய ஆட்சியாளர்களின் பல்லவியை' தானும் மிக சமீபத்தில் கூறியிருக்கின்றார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அதிகாரத் தரப்புக்குக் கண்மூடித்தனமாக வழங்கப்பட்டுள்ள பரந்த அதிகாரங்கள் பல அநீதிகளை விளைவித்துள்ளன. சிவில் சமூக அமைப்பான 'வாழ்வதற்கான உரித்து' மனித உரிமைகள் மையத்தின் ஒகஸ்ட் 2024 அறிக்கையின்படி, 2009 மற்றும் ஆகஸ்ட் 2024 க்கு இடையில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 4,100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 342 பேர் மீது மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏனையோர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட பின்னர் குற்றம் சுமத்தப்படாமலேயே விடுவிக்கப்படிருக்கின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் மிக மோசமானது. அச்சட்டம் சந்தேக நபர்களை கேட்டுக் கேள்வியின்றி நீண்டகாலமாக காவலில் தடுத்து வைக்க அனுமதிக்கிறது. பயங்கரவாதத்தைப் பற்றிய கட்டுமட்டில்லாத பரந்த விளக்கத்தை அனுமதிக்கும் அச்சட்டத்தை எவரின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தையும் வாழ்வியல் உரிமைகளையும் நசுக்க அதிகாரத் தரப்பு பயன்படுத்த முடியும். அந்தகைய கட்டுப்பாடில்லாத வாய்ப்பை அந்தச் சட்டம் வழங்குகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2020 சிறைச்சாலை அறிக்கையின்படி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஆண் தடுப்புக் கைதிகளில் ஏறக்குறைய 60 வீதம் பேர் ஐந்து வருடங்களுக்கும் மேலாக சிறையில் கழித்துள்ளனர் - எந்தக் குற்றமும் நிரூபிக்கப்படாமல். அதே போல 22 வீதம் பேர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வாறு சிறைக்குள் முடக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தவிர, இதன் கீழ் கைது செய்யப்படுவோரை சட்டப் பாதுகாப்பின்றி சித்திரவதைக்கு உட்படுத்துதல், அப்பாவிகளை அச்சுறுத்தி குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பெற்று அவர்களைக் குற்றவாளிகளாக்குவது என்று இச்சட்டம் விளைவித்த கொடூரங்களின் அளவு வகைதொகையற்றது.

# தி.மு.கவை வீழ்த்த விஜய், இ.பி.எஸ், அண்ணாமலை ஒன்றிணைய வேண்டும்

## நடிகை கஸ்தூரி வலியுறுத்தல்




"நடிகர் விஜய் கூறியது போல வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறாவிட்டால் அவரது வாய்க்கு நானே சர்க்கரை போடுவேன். இதற்கே அவருக்கு ஆதரவு தரவேண்டும்."

– இவ்வாறு திருச்சியில் நடிகை கஸ்தூரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்து மக்கள் கட்சி சார்பில் சனாதன ஆதரவு வழக்கறிஞர்கள் கருத்தரங்கு திருச்சி ஸ்ரீரங்கம் கிழக்கு உத்தரவீதியில் நேற்று நடைபெற்றது. இதில் இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத், நடிகை கஸ்தூரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு பின்னர் நடிகை கஸ்தூரி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"இன்றைய கூட்டத்தில் சனாதனி, சட்டம் படித்தவள் என்ற முறையில் கலந்து கொண்டேன். பிராமணர்கள் ஏதாவது கருத்துக்கூறினால் அவர்கள் மீது பொய் வழக்கு போடுவது, அவர்களுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கி விடுவது போன்ற செயல்களை எப்படி எதிர்கொள்வது என ஆலோசித்து வருகிறோம்.

நவம்பர் .3 ஆம் திகதி சென்னையில் இந்து மக்கள் கட்சி ஆர்ப்பாட்டத்தில் நான் பேசாத விஷயங்கள் பெரிதாக்கப்பட்டன. நடிகர் விஜய் கூறியது போல வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறாமல் மைனஸில் சென்றால் அவரது வாய்க்கு சர்க்கரை போடுவேன். இதற்கே அவருக்கு ஆதரவு தரவேண்டும்.

வி.சி.கவில் ஒன்று திருமாவளவன் இருக்க வேண்டும் அல்லது ஆதவ் அர்ஜுனா இருக்க வேண்டும் என்ற நிலை தான் உள்ளது. தி.மு.க. கூட்டணி எம்பியாக இருக்கும் திருமாவளவன் அக்கூட்டணியை விட்டு வெளியே வருவாரா எனத் தெரியவில்லை.

சினிமா செய்திகளை பார்ப்பதில்லை என உதயநிதி கூறுவது தனது ரெட் ஜெயன்ட் மூவிஸை கூறுகிறார் போல. உதயநிதிக்கு தரக்குறைவாக பேசுவது ஒன்றும் புதிதல்ல. இன்று விஜய்யை பற்றி பேசியுள்ளார். விஜய்க்கு ஜாக்பாட் அடித்துள்ளது. தமிழகத்தில் உதயசூரியனுக்கு மாற்று இரட்டை இலை தான் என 60 ஆண்டு காலமாக இருந்து வந்தது.

த.வெ.க. இன்னும் சின்னமே வாங்கவில்லை. என்ன சின்னம் வரப்போகிறது என்பது கூடத் தெரியாது. விஜய்யை முன்னிறுத்தி தி.மு.க, அ.தி.மு.கவின் உண்மையான வீச்சையும், அவர்களுடைய உண்மையான முகத்தையும் மறைக்கின்றனர். இது ஒரு வியாபார தந்திரம். அமைச்சர் சேகர் பாபுவின் குட்புக்கில் கஸ்தூரி இல்லை. என்னுடைய சமீபகால வரலாறை பார்த்தால் உங்களுக்கு புரியும். அதனால் அவர் குறித்து நான் பேச விரும்பவில்லை.

2026 தேர்தலில் ஒரு கட்சிக்கு எதிராக அனைத்து கட்சிகளும் தனித்தனியாக போராடி வருகின்றனர். அனைத்து கட்சிகளும் ஒரு குடையின் கீழ் வரவேண்டும். மக்களைப் பொருத்தவரை அனைத்து பிரச்சனைகளுக்கும் ஏதோ ஒரு வகையில் ஆளுகின்ற திமுக அரசு காரணமாக இருக்கிறது என்ற மனநிலைக்கு வந்து விட்டனர்.

சமீபத்தில் வெள்ளம் வந்தது. 4,000 கோடி ரூபாவுக்கு குழாய் பதித்தனர். அது வேலை செய்யவில்லை. ஜெனரேட்டர், மோட்டார் பம்புகளை வைத்து தண்ணீரை அப்புறப்படுத்தினர். 4,000 கோடி ரூபாவுக்கு குழாய் பதித்ததற்கு பதிலாக ஜெனரேட்டரும், மோட்டார் வாங்கி இருக்கலாமே. இது மக்களுக்கும் தெரியும். அனைவரும் வெறுப்பில் உள்ளனர். இதை மீறி 2026 இல் மீண்டும் தி.மு.க. ஜெயிக்குமா என்றால், அனைவரும் தனித்தனி அணியாக இருப்பதால் தி.மு.க. வெற்றி பெறலாம்.

இதனாலேயே விஜய், இ.பி.எஸ், அண்ணாமலை ஆகியோரை உசுப்பேற்றிவிட்டு அவர்கள் ஒன்றிணையாமல் இருக்க பிரித்தாளும் சூழ்ச்சியை திமுக கச்சிதமாக மேற்கொள்கிறது. சீமான் தனித்து தான் நிற்பேன் என கூறியுள்ளார். சீமான் என்னை திட்டினாலும் பரவாயில்லை. தி.மு.கவை வெளியேற்ற வேண்டும் என்ற மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதன் பின் அவரவர் கொள்கைகளை பாருங்கள்." – என்றார்.

# ஃபெங்கல் புயல் பாதிப்பு: நடிகர் கார்த்தி நிதி உதவி



ஃபெங்கல் புயல் நிவாரண நிதியாக 15 லட்சம் ரூபாவை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நடிகர் கார்த்தி வழங்கினார்.

இது தொடர்பாக தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"ஃபெங்கல் புயல் மற்றும் கனமழை, 14 மாவட்டங்களில் பல்வேறு இழப்புகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், தமிழக அரசு மேற்கொண்டு வரும் நிவாரணப்பணிகளுக்குத் துணை நிற்கும் விதமாக, 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு' நடிகரும், உழவன் அமைப்பின் நிறுவனருமான கார்த்தி 15 லட்சம் ரூபாவுக்கு காசோலையை இன்று நம்மிடம் வழங்கினார். அவருக்கு என் அன்பும், நன்றியும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நடிகர் சிவகார்த்திகேயன் ஃபெங்கல் புயல், கனமழை பாதிப்பு நிவாரண பணிகளுக்காக 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கியது குறிப்பிடத்தக்கது.




# கிளர்ச்சியாளர்கள் டாமஸ்கஸை கைப்பற்றியதால் சிரியாவை விட்டு வெளியேறினார் ஆசாத்

## ரஷ்யா தகவல்

அமைதியான முறையில் ஆட்சி அதிகாரத்தை மாற்றுவதற்கான உத்தரவினை வழங்கிவிட்டு சிரிய ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறினார் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் கூறுதையில்,

“ஜனாதிபதிர் பஷார் ஆசாத் மற்றும் சிரிய அரபு குடியரசு பிராந்தியத்தில் மோதலில் ஈடுபட்டுவந்த குழுக்களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையின் விளைவாக, தனது ஜனாதிபதி பதவியை துறந்து விட்டு நாட்டை விட்டு வெளியேறும் முடிவினை எடுத்தார், அமைதியான முறையில் ஆட்சி அதிகாரத்தை மற்றுவதற்கான உத்தரவினை வழங்கிவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் ரஷ்யா பங்கேற்கவில்லை, சிரியாவில் உள்ள ரஷ்ய துருப்புகளும் ரஷ்ய ராணுவ தளங்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. என்றாலும் உடனடியாக அவர்களுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை.” என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

சிரியாவில் கிளர்ச்சிப் படைகள் விரைவான தாக்குதல் மூலம் தலைநகர் டாமஸ்கஸை நேற்று ஞாயிற்றுக் கிழமை கைப்பற்றியதால், அங்கு ஐந்து தசாப்தங்கள் நடந்து வந்த ஆசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.


சிரிய கிளர்ச்சிக் குழுவான ஹயாத் தஹ்ரிர் அல் ஷாம் தளபதி கோலானி நேற்று ஞாயிற்றுக் கிழமை அரசுத் தொலைக் காட்சியில் தோன்றி வாசித்த அறிக்கையில், “எதிர்காலம் நம்முடையது, இனி பின்வாங்குவதற்கு இடமேதும் இல்லை. கடந்த 2011 இல் நாம் தொடங்கிய பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்” என்று தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் நேற்று தலைநகரை விட்டு விமானத்தில் அடையாளம் தெரியாத இடத்துக்கு தப்பியோடிய நிலையில், கிளர்ச்சிப்படை, டாமஸ்கஸ் விடுதலை பெற்று விட்டதாக அறிவித்தது. மேலும் எங்களின் நகரம் விடுதலை பெற்றுவிட்டது என்றும், கொடுங்கோலன் ஆசாத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்து விட்டதாகவும் நாங்கள் அறிவிக்கிறோம் என்று அறிவித்தது.

தலைநகர் டாமஸ்கஸ் கிளர்ச்சியாளர்கள் வசமானதைத் தொடர்ந்து கிளர்ச்சிப் படையினரும் பொதுமக்களில் சிலரும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சிரிய ஜனாதிபதி ஆசாத் நாட்டைவிட்டு வெளியேற பயன்படுத்திய விமானம் சுட்டு விழ்த்தப்பட்டிருக்கலாம் அல்லது இயந்திர கோளாறு காரணமாக விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்ற ஊகங்கள் வேகமாக பரவி வருகின்றன.













# சிரிய ஜனாதிபதி ஆசாத் சென்ற விமானம் விபத்துக்குள்ளானதா?

## பரவும் ஊகங்கள்

சிரிய தலைநகர் டமாஸ்கஸை கிளர்ச்சியாளர்கள் குழு கைப்பற்றிய நிலையில், நாட்டை விட்டு தப்பியோடிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் விமானம் மாயமானதால் குழப்பமான சூழல் நிலவுகிறது.

டமாஸ்கஸ் நகருக்குள் கிளர்ச்சியாளர் படை நுழைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் விமானம் மூலம் நாட்டை விட்டு தப்பியோடினார் என கூறப்படுகிறது.

அவர் ரஷ்யா அல்லது ஜோர்டான் நாட்டில் அடைக்கலம் புகுந்திருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அதேநேரம் அவர் பயணித்த விமானம் சுமார் ஆயிரம் அடி உயரத்தில் இருந்து திடீரென தரையிறங்கியதாகக் கூறப்படுகிறது. இதனால், அவர் பயணித்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன

விமானங்களின் தரவுகளின்படி, வடக்கு நோக்கி திரும்புவதற்கு முன்பாக அந்த விமானம் தொடக்கத்தில் கிழக்கு நோக்கிப் பறந்தது. சிறிது நேரத்தில் ஹோம்ஸ்க்கு மேலே வட்டமிடும் போது அந்த விமானத்தின் சமிக்ஞைகள் காணாமல் போயின என்று தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆசாத்தின் விமானம் காணாமல் போனது குறித்த ஊகங்கள் சமூக வலைதளங்களில் வலம்வரத்தொடங்கியுள்ளன.

விமானம் சென்ற பாதை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு இருக்கலாம் அல்லது விபத்துக்குள்ளாகி இருக்கலாம் என பல ஊகங்கள் சமூக வலைதளங்களில் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

அதேபோல் விமானம் தீப்பிடிப்பது போன்ற, விபத்துக்குள்ளானது போன்ற உறுதிப்படுத்தப்படாத காணொலிகள் வலம் வரத்தொடங்கியுள்ளன.









# மின்சாரக் கட்டணத்தை மூன்றில் இரண்டு மடங்கால் குறைப்பதாகக் கூறிய ஜனாதிபதியின் பதில் என்ன?

“இலங்கை மின்சார சபை 200 பில்லியன் ரூபா இலாப மீட்டியுள்ளது. அவ்வாறிருக்கையில் ஏன் மின் கட்டணத் தைக் குறைக்க முடியாது. தேர்தலுக்கு முன்னர் மின்சாரக் கட்டணத்தை மூன்றில் இரண்டு மடங்கால் குறைப்பதாகக் கூறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது என்ன பதில் கூறப்போகின்றார்?”

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ள தொழிற்சங்கள், மின்சார சபையின் முன்மொழிவுக்குக் கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன.

தற்போது நடைமுறையிலுள்ள மின் கட்டணத்தை எதிர் வரும் 6 மாதங்களுக்கு அவ்வாறே பேண முடியும் என்று இலங்கை மின்சார சபை, பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் முன்மொழிந்துள்ளது.

இந்நிலையிலேயே மின்சார சபையின் இந்த முன் மொழிவுக்கு தொழிற்சங்கங்கள் இவ்வாறு எதிர்ப்பை வெளிப் படுத்தியுள்ளன.

ஐக்கிய தொழிற்சங்க மற்றும் மின் பாவனையாளர்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித இது தொடர்பில் தெரிவிக்கையில்,

“இலங்கை மின்சார சபை விலைச் சூத்திரத்தால் 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது. தற்போது நீர்த் தேக்கங்கள் நிரம்பி வழிந்தோடுகின்றன. குறைந்த செல விலேயே மின் உற்பத்தி இடம்பெறுகின்றது.

எனவே, உடனடியாக மின்சாரக் கட்டணத்தைக் குறைக் குமாறு தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளரான ரஞ்சன் ஜயலால் கூறி னார். அது மாத்திரமின்றி டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன் னர் விசேட கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இவற்றை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து 30 சதவீதத்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதன் ஊடாக அரசுக்கு எந்த வகையிலும் நட்டம் ஏற்படப் போவதில்லை.

காரணம் தற்போது மின் அலகுகளுக்கு வரி அற விடப்படுவதில்லை. ரஞ்சல் ஜனலால் கூறியதைப் போன்று மின்சார சபை 200 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள் ளது.

எனவே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனா திபதியாவதற்கு முன்னரும், அதன் பின்னரும் கூறிய தைப் போன்று 3 ஆயிரம் ரூபாவாகக் காணப்படும் மின் கட் டணத்தை 1000 ரூபாவாகக் குறைக்க வேண்டும்.

மின் கட்டணத்தில் 35 சதவீத நிவாரணத்தைத் தற்போது மின்சார சபையால் பாவனையாளர்களுக்கு வழங்க முடியும். தொழிற்சங்கத் தலைவராக இருந்த வசந்த சமரசிங்க இன்று வர்த்தக அமைச்சராகவுள்ளார்.

இவர் ஜனாதிபதியின் கூற்றை சவாலுக்குட்படுத்தும் வகை யில், மூன்று ஆண்டுகளின் பின்னரே மின் கட்ட ணத்தை 30 சதவீதத்தால் குறைக்க முடியும் என்று கூறுகின் றார்.

வர்த்தக அமைச்சர் ஜனாதிபதியையும், மக்களையும் காட்டிக் கொடுக்கும் வகையில் கருத்துக்களை வெளியி டுவதை விடுத்து, இம்மாதம் முதலாம் திகதி முதல் மின் கட்டணத்தை குறைத்து மக்களுக்கு நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.

அகில இலங்கை சிறு தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நிருக்ஷ குமார குறிப்பிடு கையில்,

“தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, 3 ஆயிரமாகக் காணப்படும் மின்சாரக் கட்டணத்தை 1000 ரூபாவாகக் குறைப்பதற்கு நீங்கள் விரும்பவில்லையா என்று அன்று மக்களிடம் கேட்டார்.

அதனை அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான உங்களின் திட்டமிடல் எங்கே? தாத்தாவின் ஆடைகளையே பேரனும் அணிந்து கொண்டு பயணிக்கின்றார் என்பது இதன் மூலம் தெளி வாகின்றது.

உங்களுக்கு வாக்களித்த மக்களை மறந்து விட்டீர்களா என்று ரஞ்ஜன் ஜயலாலிடம் கேட்கின்றோம். மக்களுக் காகவும், மின்சார பாவனையாளர்களுக்காகவும் ஏன் குரல் கொடுக்காமலிருக்கின்றீர்கள்? மேற்கத்தேய ஆடையணிந்த அதிகாரிகளின் ஆலோசனைகளின் படி தீர்மானங்களை எடுத்தால், கோட்டாபய ராஜபக்ஷவின் கதியே உங்களுக் கும் ஏற்படும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.” – என் றார்.

மின்சார பாவனையாளர்களின் சங்கத் தலைவர் ஏ.ஆர். அதுல தெரிவிக்கையில்,

“ஆட்சிக்கு வர முன்னர் மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க முடியும் என்று தேசிய மக்கள் சக் தியினர் குறிப்பிட்டனர். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களையே இந்தத் திசைக்காட்டி அரசும் முன்னெடுத் துச் செல்கின்றது.

மின் கட்டணத்தை உடனடியாகக் குறைக்குமாறு அன்று தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்த வசந்த சமரசிங்க போன்றோர் வீதிக்கு இறங்கி போராடினர். இன்று அவர்கள் எங்கிருக்கின்றனர்? ரஞ்ஜன் ஜயலால் போன்றவர்களைக் கண்டுபிடிக்கவும் கடினமாகவுள்ளது.” – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் -09.12.2024




எதிர் காலம் பற்றிய எண்ணங்களும் கனவுகளும் உங்கள் மனதில் நிறைந்து காணப்படும். இது அனைவரிடத்திலும் காணப்படும் பொதுவான விருப்பம். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு சிறந்த நாள்.

பணியிடத்தில் உன்னதமான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

பரிசுப் பொருள்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் துணை திருப்தி காண்பார்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உங்களிடம் தேவையான பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் இன்று வலிமை நிறைந்து காணப்படும்.




உங்கள் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுக்க வேண்டியது அவசியம். இன்று அதை பொறுப்புகள் காணப்படும். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி தாமதமாகும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் அடையலாம்.

இருக்கும் வேலையை விட்டு வேறு வேலைக்கு போகும் எண்ணம் உண்டாகும். உங்களுக்கு திருப்தி அளிக்கும் ஒரு மாற்றத்தை இன்று நீங்கள் விரும்புவ்வீர்கள்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுக்காமல் சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க இந்த அனோகுமுறை தேவை.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். அதனைச் சுமையாக உணர்வீர்கள். பணத்தை திட்டமிட்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கி செலவுகளை தவிர்த்திடுங்கள்.

பல்வலி மற்றும் கண் சம்பந்தமான பாதிப்புகள் ஏற்படலாம். இது உங்கள் கவலைக்கு காரணமாக அமையும்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சினை ஒன்றை கையாள்வதில் கருத்தாய் இருப்பீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்க முயலுங்கள்.

உங்கள் பணியில் இன்று வளர்ச்சி கிடைப்பதற்கு உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் பேசும் போது மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தகவல் பரிமாற்றத்தின் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் நிதியைப் பொறுத்தவரை முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். புதிய முதலீடுகள் செய்வது அல்லது அதற்கான முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல் வலி அல்லது ஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாக திட்டமிட்டு செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும். இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணயில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்திற்கு செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும். பணம் இன்று குறைவாக இருபதால் நீங்கள் முறையாக திட்டமிட இயலாது.

இன்று பதட்டத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று சில பிரச்சினைகளை சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

மனக் குழப்பம் காரணமாக ஆரோக்கியக் குறைபாடு காணப்படும். கால் வலி மற்றும் கணுக்கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலனைத் தரும்.




அதிர்ஷ்டக்குறைவுகாரணமாககடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.

வலிமை மற்றும் ஆற்றல் காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இன்று அனுசரணையுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -09.12.2024




உங்கள் செயல்களை ஊக்கத்துடன் குறித்த நேரத்தில் செய்வதன் மூலம் சிறந்த பலன்கள் கிடைக்கும். சின்னச் சின்ன விஷயங்களுக்காக மன அமைதியை கெடுத்துக் கொள்ளாமல் விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடமும் கீழ் பணிபுரிபவர்களிடமும் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். இலக்கில் கவனம் செலுத்தினால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியும்.

உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

நிலையான ஆரோக்கியத்திற்கு உணவுப் பழக்கத்தில் கவனம் தேவை. திடமாக இருக்க யோகா மேற்கொள்ளுங்கள்.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணியையும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உற்சாகக் குறைவு காரணமாக தன்னம்பிக்கையும் ஆற்றலும் பாதிக்கப்படும்.




இன்று உங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசித்து சில நல்ல திட்டங்களை உருவாக்குவீர்கள். உங்கள் தொழில் வட்டாரத்தில் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

பணியில் வெற்றி பெறுவதற்கு சிறப்பாக திட்டமிடும் திறமை உங்களிடம் காணப்படும். அதனால் பணிகளை குறித்த நேரத்தில் தரமாக முடித்து தர முடியும்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்ளவும். சரியான புரிந்துணர்வு இருந்தால் உறவு நல்லுறவாக இருக்கும்.

உங்கள் வருமானம் அதிகரிப்பதற்கான வழி காண வேண்டும். ஆடம்பரப் பொருட்களுக்காக பணத்தை அதிகமாக செலவு செய்வதை தவிர்க்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். மன உளைச்சலிலிருந்து விடுபட தியானம் மேற்கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.

இன்று கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.

